# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று தரமதிப்பீட்டில் A+ தகுதி பெற்றது)

நாள் : 10.05.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ-மாணவிகளுக்கான ஹாக்கி, கைப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, கபடி, யோகா, கோ-கோ, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளுக்கான கோடைகால இலவச விளையாட்டுப் பயிற்சி முகாம் வரும் மே மாதம் 15 முதல் 29 வரை 15 நாட்கள் பல்கலைக்கழக விளையாட்டு மைதானங்களில் நடைபெற உள்ளது.

காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையும், பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அழகப்பா பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தில் சிற்றுண்டி எதிரே உள்ள விளையாட்டு இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், விண்ணப்பத்தினை பல்கலைக்கழக இணையதளம் வாயிலாகவும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் பல்கலைக்கழக விளையாட்டு இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 13.5.2017 மாலை 4.00 மணி. பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவ-மாணவியர்களுக்கு ஊட்டச்சத்து உணவாக பால், முட்டை மற்றும் பயறு வகைகள் அளிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு 04565-224400, 223571 ஆகிய தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சி முகாமில் அனைத்து நாள்களும் தவறாது கலந்து கொள்ளும் மாணவ-மாணவியர்களுக்கு பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இந்த இலவச விளையாட்டு பயிற்சி முகாமில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெறலாம் என பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) பேரா. வி. பாலச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)